26.12.2016

தினமணி

**சம்பா பயிருக்காக குடந்தைக்கு ரயிலில் வந்த 1,328 டன் உரம்**



தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்டங்களில் சாகுபடி செய்யப்பட்டுள்ள நெற்பயிர்களுக்காக தூத்துக்குடியிலிருந்து கும்பகோணத்திற்கு ரயில் வேகன்கள் மூலம் யூரியா, காம்ப்ளக்ஸ் உரங்கள் 1,328 டன் ஞாயிற்றுக்கிழமை வந்தன. ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தில் தற்போது சம்பா சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இந்த பயிர்களுக்கு தேவையான ஊட்டம் தருவதற்காக தூத்துக்குடியிலிருந்து யூரியா 376 டன்னும், காம்ளக்ஸ் 942 டன்னும் ரயில் மூலம் 21 வேகனில் ரயில்நிலையத்திற்கு வந்தன. அவை லாரிகள் மூலம் 3 மாவட்டங்களில் உள்ள மையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

**பயிர்க் கடன் தள்ளுபடி: 81 ஆயிரம் விவசாயிகள் பயன்**



பயிர்க் கடன் தள்ளுபடியால் கடலூர் மாவட்டத்தில் 81 ஆயிரம் விவசாயிகள் பயன் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. இதுகுறித்து மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் மு.சத்தியசீலன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: 2016-ஆம் ஆண்டு புதிதாக பொறுப்பேற்ற தமிழக அரசு, சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கான வேளாண் கடன் தள்ளுபடி திட்டத்தை அறிவித்தது.

அதன்படி, கூட்டுறவு நிறுவனங்களில் சிறு மற்றும் குறு விவசாயிகளால் பெறப்பட்டு, 31.3.2016 அன்று நிலுவையில்

இருந்த பயிர்க்கடன், மத்திய கால வேளாண்மைக் கடன் மற்றும் பண்ணை சார்ந்த நீண்டகாலக் கடன் ஆகிய கடன்களை தள்ளுபடி செய்து அரசு ஆணையிட்டது.

இந்தத் திட்டத்தின் மூலம் கடலூர் மாவட்டத்தில் 2.5 ஏக்கர் வரை நிலம் வைத்துள்ள குறு விவசாயிகள், 5 ஏக்கர் வரை நிலம் வைத்துள்ள சிறு விவசாயிகள் என 80,933 விவசாயிகள் ரூ.320.18 கோடி பயனடைந்துள்ளனர். இத்திட்டம் கடலூர் மாவட்டத்தில் உள்ள 167 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், 3 தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் மற்றும் கடலூர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி, அதன் கிளைகளில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

இதில், விவசாயக் கடன் அட்டைத் திட்டத்தின் மூலம் (கேசிசி) பயிர்க் கடன் பெற்ற 60,121 சிறு மற்றும் குறு விவசாயிகள் ரூ.255.92 கோடியும், நகை ஈட்டின் பேரில் கடன் பெற்ற 1,188 விவசாயிகள் ரூ.6.36 கோடியும் கடன் தள்ளுபடி பெற்றனர். விவசாயம் சார்ந்த மத்தியக் காலக் கடன்களான கறவை மாடு, டயர் வண்டி மாடு, பவர் டில்லர், மோட்டார் போன்ற கடன் பெற்ற 13,515 விவசாயிகளுக்கு ரூ.46.58 கோடியும், தானே புயல் சேதம் மூலம் பாதிக்கப்பட்ட விவசாயிகள் பெற்ற கடன்களை மத்தியக் காலக் கடனாக மாற்றம் செய்யப்பட்டு நிலுவையிலிருந்த 6,109 விவசாயிகளுக்கான ரூ.11.32 கோடியும் தள்ளுபடி செய்யப்பட்டது. மேலும், கடன் தள்ளுபடி பெற்ற விவசாயிகளுக்கு அதற்கான

சான்றும், கடன் நிலுவை இல்லை என்ற சான்றும் வழங்கப்பட்டுள்ளது.

தற்போது கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ள விவசாயிகளுக்கு, நிகழாண்டுக்கான புதிய பயிர்க் கடன்களும் வழங்கப்பட்டு வருகின்றன என அதில் தெரிவித்துள்ளார்.

**"சிறு விவசாயிகள் கொத்தமல்லி பயிரிட்டு லாபம் பெறலாம்'**



சிறு, குறு விவசாயிகள் நறுமண கொத்தமல்லி பயிரிட்டு அதிக லாபம் பெறலாம் என வேளாண்மைத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து, வேளாண்மைத் துறை சார்பில் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

இந்தியாவில் நறுமண பயிர்களில் கொத்தமல்லி முக்கியமானதாகும். கடந்த 2015 -16-ஆம் ஆண்டில் 5.85 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் கொத்தமல்லி பயிரிடப்பட்டு 4.91 லட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. நாட்டின் மொத்த கொத்தமல்லி உற்பத்தியில் 3-இல் 2 பங்கு ராஜஸ்தான், மத்தியப் பிரதேச மாநிலங்களில் உற்பத்தி செய்யப்படுகிறது. தமிழ்நாடு, குஜராத், ஆந்திரம், கர்நாடகம், ஒடிஸா ஆகிய மாநிலங்களிலும் கொத்தமல்லி அதிகளவில் உற்பத்தி செய்யப்படுகிறது. தமிழகத்தில் குளிர்காலப் பயிராக நவம்பர், டிசம்பர் மாதங்களில் கொத்தமல்லி விதைக்கப்டுகிறது. தை மாதத்திலும் அதிகமாக பயிரிடப்படுகிறது. தென்னாப்பிரிக்கா, அமெரிக்கா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு கொத்தமல்லி ஏற்றுமதி செய்யப்படுகிறது. இந்தியாவில் உற்பத்தியாகும் கொத்தமல்லியில் 50 சதவீதம் நறுமணம் மற்றும் பதப்படுத்தும் தொழிற்சாலைகளுக்கு அனுப்பப்படுகிறது.

தமிழகத்தில் மார்ச், மே மாதங்கள் கொத்தமல்லி அறுவடை காலம் என்பதால் அந்தப் பருவத்தில் சந்தைகளில் வரத்து அதிகரித்து காணப்படும். வர்த்தக மூலங்களின்படி ராஜஸ்தானில் வரும் 2017-ஆம் ஆண்டு பிப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் கொத்தமல்லி வரத்து வெகுவாகக் குறையும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது. ரஷ்யாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் கொத்தமல்லி தரம் குறைந்து காணப்பட்டாலும் விலை குறைவாக இருப்பதால் அதிக வர்த்தகம் செய்யப்படுவதாகக் கூறப்படுகிறது. நாட்டின் மற்ற மாநிலங்களில் உற்பத்தி மற்றும் இறக்குமதி

செய்யப்படும் கொத்தமல்லி விலையில் தாக்கத்தை ஏற்படுத்தினாலும், தமிழகத்தில் உற்பத்தி செய்யப்படும் கொத்தமல்லிக்கு நல்ல விலை கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது சாகுபடியாகும் கொத்தமல்லிக்கு குவிண்டாலுக்கு ரூ.8,500 கிடைக்கும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் விவசாயிகள் கொத்தமல்லி சாகுபடி செய்து நல்ல லாபம் பெறலாம் என்று தெரிவித்துள்ளனர்.

**வெண்பட்டு புழு வளர்ப்பு பயிற்சி**

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு அருகே கோட்டூரில் விவசாயிகளுக்கு வேளாண் துறை சார்பில் வெண்பட்டு புழு வளர்ப்பு பயிற்சி அண்மையில் நடைபெற்றது. இப்பயிற்சிக்கு, பாலக்கோடு வேளாண் உதவி இயக்குநர் மு.இளங்கோவன் தலைமை வகித்தார். மத்தியப் பட்டு வாரியத்தைச் சேர்ந்த வி.சின்னதுரை, மல்பெரி ரகத்தேர்வு, நாற்றாங்கால் நடவு மற்றும் பராமரிப்பு குறித்து வெண்பட்டு புழு வளர்ப்பு முறைகள் அதன் அவசியம் குறித்து பயிற்சி அளித்தார்.

உதவி ஆய்வாளர் என்.முருகமாணிக்கம், பட்டு வளர்ச்சித் துறையின் நலத் திட்ட உதவிகள் மற்றும் புழு வளர்ப்பில் ஒருங்கிணைந்த பூச்சி, நோய் தாக்குதல் குறித்து தொழில்நுட்பங்களை தொடர்பாக விளக்கமளித்தார். இதைத் தொடர்ந்து, தோட்டம், நடவுத் தோட்டப் பராமரிப்பு குறித்து செயல் விளக்கம் அளிக்கப்பட்டது. பட்டு வளர்ச்சித் துறை உதவி ஆய்வாளர் கலைச்செல்வி, உதவித்

தொழில்நுட்ப மேலாளர் ரேணுகா உள்பட 25-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். எண்ணெய் வித்துகளில் விதை கிராமப் பயிற்சி: பென்னாகரம் வட்டாரத்தில் உள்ள கரியம்பட்டியில் அண்மையில் வேளாண் விரிவாக்கத் திட்டம் சார்பில் எண்ணெய் வித்துகளில் விதை கிராமப் பயிற்சி விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

விதைச் சான்றளிப்பு அலுவலர் சசிகுமார் தலைமை வகித்துப் பேசினார். இதில், எண்ணெய் வித்து சாகுபடியில் தரமான விதைகளை உருவாக்க, விதைத் தேர்வு செய்தல், விதை நேர்த்தி, பராமரிப்பு, நோய் மேலாண்மை, விதை சேமிப்பு மற்றும் இயற்கை முறை விவசாயம் குறித்து விளக்கமளிக்கப்பட்டது. வட்டார தொழில்நுட்ப மேலாளர் சரவணன், உதவித் தொழில்நுட்ப மேலாளர்கள், கிருஷ்ணமூர்த்தி, ஜெயம் மற்றும் 25-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**வெண்பட்டு புழு வளர்ப்பு பயிற்சி**

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு அருகே கோட்டூரில் விவசாயிகளுக்கு வேளாண் துறை சார்பில் வெண்பட்டு புழு வளர்ப்பு பயிற்சி அண்மையில் நடைபெற்றது. இப்பயிற்சிக்கு, பாலக்கோடு வேளாண் உதவி இயக்குநர் மு.இளங்கோவன் தலைமை வகித்தார். மத்தியப் பட்டு வாரியத்தைச் சேர்ந்த வி.சின்னதுரை, மல்பெரி ரகத்தேர்வு, நாற்றாங்கால் நடவு மற்றும் பராமரிப்பு குறித்து வெண்பட்டு புழு வளர்ப்பு முறைகள்

அதன் அவசியம் குறித்து பயிற்சி அளித்தார். உதவி ஆய்வாளர் என்.முருகமாணிக்கம், பட்டு வளர்ச்சித் துறையின் நலத் திட்ட உதவிகள் மற்றும் புழு வளர்ப்பில் ஒருங்கிணைந்த பூச்சி, நோய் தாக்குதல் குறித்து தொழில்நுட்பங்களை தொடர்பாக விளக்கமளித்தார். இதைத் தொடர்ந்து, தோட்டம், நடவுத் தோட்டப் பராமரிப்பு குறித்து செயல் விளக்கம் அளிக்கப்பட்டது. பட்டு வளர்ச்சித் துறை உதவி ஆய்வாளர் கலைச்செல்வி, உதவித் தொழில்நுட்ப மேலாளர் ரேணுகா உள்பட 25-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். எண்ணெய் வித்துகளில் விதை கிராமப் பயிற்சி: பென்னாகரம் வட்டாரத்தில் உள்ள கரியம்பட்டியில் அண்மையில் வேளாண் விரிவாக்கத் திட்டம் சார்பில் எண்ணெய் வித்துகளில் விதை கிராமப் பயிற்சி விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

விதைச் சான்றளிப்பு அலுவலர் சசிகுமார் தலைமை வகித்துப் பேசினார். இதில், எண்ணெய் வித்து சாகுபடியில் தரமான விதைகளை உருவாக்க, விதைத் தேர்வு செய்தல், விதை நேர்த்தி, பராமரிப்பு, நோய் மேலாண்மை, விதை சேமிப்பு மற்றும் இயற்கை முறை விவசாயம் குறித்து விளக்கமளிக்கப்பட்டது. வட்டார தொழில்நுட்ப மேலாளர் சரவணன், உதவித் தொழில்நுட்ப மேலாளர்கள், கிருஷ்ணமூர்த்தி, ஜெயம் மற்றும் 25-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

தினமலர்
உண்மையின் உரைகல்

**உரம், பூச்சி மருந்து கடைகளில் வேளாண் அதிகாரிகள் ஆய்வு**

உளுந்தூர்பேட்டை: உளுந்தூர்பேட்டை பகுதிகளிலுள்ள உரம் மற்றும் பூச்சி மருந்து விற்பனை கடைகளில், வேளாண் துறை அதிகாரிகள் திடீர் ஆய்வு செய்தனர்.

உளுந்தூர்பேட்டை பகுதிகளிலுள்ள உரம் மற்றும் பூச்சி மருந்து விற்பனை கடைகளில், வேளாண் துறை உதவி இயக்குநர்கள் வேலாயுதம், சீனிவாசன் ஆகியோர் திடீர் ஆய்வு செய்தனர்.

கடைகளில் விற்பனை உரிமம் பெற்று முறையாக விற்பனை செய்யப்படுகிறதா எனவும் ஆய்வு செய்தனர். வேளாண் அலுவலர்கள் வரதராஜன், மோகன்ராஜ் ஆகியோர் உடனிருந்தனர்.